(முற்பகல் 10 10)

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தங்களுடைய அனுமதியோடு ஒரு வேண்டுகோளை இங்கே வைக்க விரும்பு கிறேன் தங்களுக்கு முடிவான தீர்ப்பைச் சொல்லக்கூடிய உரிமை இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் ஆனால் பொதுமக்கள் பேசத்தக்க வகையில் ஒரு பிரச்சினை சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒரு உறுப்பினரைப் பற்றி வெளியிலே பரவி இருக்குமே யானால் அது தவறு என்பதை வெளியிடுவதற்கான ஒரு வாய்ப்பு இந்த சட்ட மன்றத்தின் மூலமாகத் தான் ஏற்படவேண்டும் ஆகவே பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளைப் பொதுமக்கள் படித்துப் பார்க்கிறபோது ஏதோ ஒரு குற்றம் எப்படியோ நடைபெற்றுவிட்டது என்று எண்ணக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்குமேயானால், அப்படி எதிர்க் கட்சித் தலைவரின் மீதோ அல்லது எதிர்க்கட்சியிலே இருப்பவர் கள் மீதோ அப்படி ஒரு எண்ணம் ஏற்படக்கூடிய நிலைமை பொதுமக்களிடத்தே உருவாக்கப்பட்டிருக்கின்றபோது அதற்குக் காரணமாக உள்ள சூழ்நிலை எது என்பதை அறிந்துக்கொள் வதற்குக் கூட உரிமைப் பிரச்னை கொண்டுவருதவன் மூலமாகத் தான் தாங்கள் தகுந்த ஆதாயத்தைத் தர முடியும் எதிர்க்கட்சி தலைவரைப் பற்றி எந்தப் பத்திரிகையிலே வேண்டுமானாலும் யார்மூலமாக வேணடுமானாலும் சட்டமன்றத்தின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு வேண்டுமானாலும், ஒருவேளை சபா நாயகரே அனுமதித்தார் என்ற பெயரைப் பயன்படுத்தியே வரக் கூடுமானால் அது அவைத்தலைவருடைய பெருமைக்கு ஏற்ற தல்ல, அது அவையினுடைய பெருமையையும் பாதிபதாகத் தான் ஆகும் என்ற காரணத்தாலேதான் மாண்புமிகு உறுப்பினர் சற்று உணர்ச்சிவசப்பட்டு அதை எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் பிறருடைய உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடியும் (குறுக்கீடு) ரீ கன்சிடர் பண்ண வேண்டும் என்று கேட்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் திரும்பவும் எழுதிக் கொடுக்கட்டும். அதைப்பற்றி நான் ஆலோசிக்கிறேன்.

(இ) தள்ளுபடி செய்யப்பெற்ற வினா.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதிக் காக கேள்வியை இங்கே போட்டு அதன் மூலம் அமைச்சர் களிடமிருந்து ஒரு அஷ்யூரன்ஸ் வாங்கலாமா என்று எண்ணித் தான் கேள்விகளைக் கொடுக்கிறார்கள் நானும் அதே மாதிரி என்னுடைய நிலக்கோட்டை தொகுதி மிகவும் பின்தங்கிய ஒரு தொகுதியாக இருப்பதால் அங்கே ஓரு நூற்பாலை வைக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தக் கேள்வி காரணமில்லாமல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. அது ஏன்?

1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றியெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். கவர்னர் உரையிலே பேசலாம் என்பதால் தள்ளுபடி செய்து இருப்பார்கள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே நூற்பாலை அமைக்கப்படுவது பற்றிய கேள்வி அனுமதிக்கப்பட்டிருக்கின்றபோது நிலக்கோட்டையில் நூற்பாலை பற்றி கேட்டபோது ஏன் அனுமதிக்கவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரையின் மீது சபையிலே பேசுவதற்கு அம்மையார் அவர்களுக்கு ஸ்பெஷலாகவே அனுமதி கொடுத்தேனே; அவரது தொகுதியான நிலக்கோட்டையில் நூற்பாலை அவ்வளவு முக்கியமானதாக இருந்தால் (குறுக்கீடு) அவர்கள் பேசியபோது முதலிலே நூற்பாலை பற்றித்தானே பேசி இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மற்றவற்றை யெல்லாம் பேசிவிட்டு இப்போது கேள்வி கேட்டால் நான் என்ன செய்ய முடியும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்செந்தூர் அர்ச்சகர் காவல் துறையினரால் தாக்கபெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி, ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், ப. தீர்த்தராமன், ப. நெடுமாறன், மு. அப்பாதுரை, ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, பொ. உத்திராவதி சு. பாலன், ப. பொன்னுரங்கம், பாபு ஜனார்த்தனன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கு. ரமணி, ரா. உமாநாத், எஸ். இராசாராமன், அ. ரகுமான்கான், சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், நா. சுந்தரராஜ் பொ. விஜயராகவன், ஆகியோர் '' கடந்த 26–1–1982 அன்று திருச்செந்தூர் முருகன் கோயிலில் அர்ச்சனை செய்து வந்த அண்ணாவி என்ற முத்துசுப்பிரமணியம்என்பவர் காவல் துறையினரால் பயங்கரமாக தாக்கப்பட்டு பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் அந்தப் பகுதியில் மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு குமரி அனந்தன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.